**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**S.C.No. 465 of 2012**

**Deposition of witness for PW-8**

பெயர் : Dr. V.டெக்கல் **01.04.2026**

தந்தை பெயர் : வரதராஜுலு

வயது : 57

முகவரி : கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, சென்னை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day of April 2026.

---

**01.04.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

2ம் எதிரி ஸ்ரீதர் ஆஜர். 1ம் எதிரி சங்கர், 3ம் எதிரி ஜெகன், 5ம் எதிரி சின்ன ஸ்ரீதர் என்கிற ஸ்ரீதர், 6ம் எதிரி ராஜா ஆகியோர் இறந்துவிட்டனர். 4ம் எதிரி கார்த்திக் என்கிற லூஸ் கார்த்தி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. (SC.86/2023)

**<u>PW8– முதல் விசாரணை</u>**

நான் தற்போது தனியார் மீனாட்சி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியர் மற்றும் துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.01.2010ம்தேதி சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசிரியாராக பணியில் இருந்தபோது கே–9, திரு.வி.க.நகர் காவல் நிலைய காவலர் HC 10273 திரு. சுப்ரமணி என்பவர் மூலம் 2.30 மணியளவில் திரு.வி.க.நகர் காவல் நிலைய குற்ற எண்.42/2010, 341, 448, 326, 302 இதசவின் என்ற வழக்கின் இறந்து போன விஜயகுமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யும் படி விண்ணப்பத்தை பெற்று அன்றைய தினம் 2.30 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். மேற்கண்ட விஜயகுமார் என்பரின் பிரேதத்தில் மரண விறைப்பு தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் மேல்

கோடு போன்ற சிராய்ப்பு காயங்கள் மற்றும் வெட்டுகாயங்கள் உடலின் தலை, கழுத்து, இரண்டு கைகள், வயிறு மற்றும் நெஞ்சு பகுதியில் காணப்பட்டன. அனைத்து காயங்களிலும் என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் 1 முதல் 21 வரையில் முறையாக மற்றும் தெளிவாக பட்டியல் இட்டு உள்ளேன். **காயங்கள்**

1. பழுப்பு நிற சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டை, வலது தொடை மற்றும் வலது பக்க வயிற்று பகுதியில் காணப்பட்டது.

2. கோடு போன்ற சிராய்ப்பு காயம் மற்றும் இன்னொரு சிராய்ப்பு காயம், செங்குத்து சாய்வான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. பழுப்பு நிற ஒழுங்கற்ற சிராய்ப்பு காயம் வலது புற நெஞ்சின் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

4. செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் வலதுபுற பின் பகுதியில் காணப்பட்டது.

5. செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் வலது காலின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

6. செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் வலது தொடையின் நடுவில் முன் மற்றும் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

7. வலது முன்னங்கையில் சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் அடியில் உள்ள ரேடியஸ் எழும்பு வெட்டுபட்டு காணப்பட்டது.

8. வலது முன்னங்கையில் தரைமட்ட சாய்வான நடுப்பகுதியல் காணப்பட்டது.

9. வலது கை புஜத்தில் நடுப்பகுதியில் வெட்டு காயம் காணப்பட்டது.

10. வலது கை புஜத்தில் மேல் வெளிப்பகுதியில் தரைமட்ட சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது.

11. வலது கை புஜத்தில் மேல்பகுதியில் 3 தரைமட்ட சாய்வான வெட்டுக்காயங்கள் காணப்பட்டது.

12. வலது பக்க நடு வயிற்று பகுதியில் செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது.

13. நடு முன் மண்டை பகுதியில் செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது அதன் அடியில் உள்ள மண்டை ஓடும் வெட்டுபட்டு காணப்பட்டது.

14. வலது முன் மண்டையின் மேல் பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

15. வலது மண்டையின் பொட்டு பகுதியில் சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது.

16. இடது பக்க முன் மண்டை, மேல் மண்டை மற்றும் பொட்டு பகுதியில் செங்குத்து சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த மண்டை ஓட்டின் மேல் மண்டையில் வெட்டு பட்டு காணப்பட்டது.

17. வலது பக்க முன் மண்டை மற்றும் மேல் மண்டையில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் அடியில் உள்ள மண்டை ஓடும் வெட்டு பட்டு காணப்பட்டது.

18. இடது பக்க முன் மற்றும் மேல் மண்டை பகுதியில் செங்குத்தான வெட்டுகாயம் காணப்பட்டது. அதன் அடியில் இருந்து மண்டை ஓட்டை திறந்து பார்த்த போது மூளையில் ரத்த கசிவு காணப்பட்டது.

19. வலது பக்க கழுத்து மற்றும் வலது பக்க கழுத்தின் பின்புறத்தில் தரைமட்ட சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது.

20. வலது பக்க கழுத்தின் கீழ் பகுதி மற்றும் முன் பகுதியில் சாய்வான வெட்டுக்காயம் காணப்பட்டது. காயத்தை கூராய்வு செய்தபோது முதுகு தண்டு வடத்தின் எலும்புகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

21. வலது கை புஜம் மற்றும் கையில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. இக்காயங்களை தவிர வேறு எந்த வெளிக்காயங்களோ அல்லது உள்காயங்களோ இல்லை.

இறந்த நபரின் உடலின் உள்உறுப்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. வயிற்றில் 420 மிலி திடமான திரவம் பகுதி செறுமான அடைந்த உணவு பகுதிகள் காணப்பட்டன. அவற்றில் எந்தவித குறிப்பிடதக்க வாசனையும் காணவில்லை. இறந்த நபரின் உடலின் உள்உறுப்புகளை எடுத்து ரசாயண பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன்.

**கருத்து –** இறந்த நபர் பல்வேறு வெட்டுக்காயங்களால் ஏற்பட்ட அதிர்வு மற்றும் ரத்த இழப்பினால் மரணம் ஏற்பட்டு இருக்ககூடும் என்று சான்றிதழ் வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Sd/-
01.04.2026 IV Addl. Sessions Judge.
IV Additional Court.